இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 24-07-2025

# தன்கர் விலகலின் பின்னணி!

ஜெகதீப் தன்கர் என்ற தனிமனிதருக்காக வருத்தப்பட ஏதுமில்லை. ஆனால் குடியரசுத் துணைத் தலைவருக்கே இந்தக் கதி தானா? என்பது வேதனை தரத்தக்கது ஆகும்.

இந்தியாவின் 14வது குடியரசுத் துணைத் தலைவராக 2022 ஆகஸ்ட் 11ஆம் தேதி ஜெகதீப் தன்கர் பதவி ஏற்றார். மூன்று ஆண்டுகளாக குடியரசுத் துணைத் தலைவராகப் பதவி வகித்து வந்த நிலையில், திடீரென அவர் தனது பதவியில் இருந்து விலகி இருக்கிறார். ‘2027 வரை நான் பதவியில் இருப்பேன்’ என்று சில நாட்களுக்கு முன்னால் சொன்னவர் அவர். ஆனால் திடீரென்று பதவி விலகல் கடிதத்தை, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு, ஜெகதீப் தன்கர் அனுப்பினார். மருத்துவக் காரணங்களுக்காக குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக தன்கர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத் தலைவர்தான், நாடாளுமன்ற மாநிலங்களவையை வழிநடத்தும் அவையின் தலைவராவார். பரபரப்பான அரசியல் சூழலில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21 ஆம் தேதி தொடங்கிய நிலையில், மாநிலங்களவையை ஜெகதீப்தன்கர் தான் வழிநடத்தினார். அப்போது நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க நோட்டீஸ் தீர்மானம் தொடர்பான மனுக்களை அவரிடம் அனைத்துக்கட்சி எம்.பி.க்களும் வழங்கினர். இந்தச் சூழலில் பதவியில் இருந்து விலகுவதாக ஜெகதீப் தன்கர் திடீரென அறிவித்துள்ளார். மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாள் கூட்டம் முடிந்ததும் 21 ஆம் தேதியன்று அவர் பதவி விலகி இருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

**“அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜெகதீப் தன்கர் பதவி விலகியுள்ளார்” என்று மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு விமர்சித்துள்ளார்.**

**“தன்கரின் திடீர் விலகல் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அதிர்ச்சியளிக்கிறது. அன்றைய தினம் மதியம் ஒரு மணியளவில் நடந்த அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர்கள் ஜே.பி.நட்டா, கிரண் ரிஜிஜூ ஆகியோர் பங்கேற்ற நிலையில், மாலையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் இருவரும் பங்கேற்கவில்லை. இந்த இடைப்பட்ட நேரத்தில் நடந்தது என்ன? 22 ஆம் தேதி மதியம் 1 மணிக்கு அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தை ஜெகதீப் தன்கர் ஏற்பாடு செய்திருந்தார். நீதித்துறை தொடர்பான சில முக்கிய அறிவிப்புகளையும் இன்று வெளியிடப்போவதாக தன்கர் கூறியிருந்தார். ஆனால், இரவோடு இரவாக ஜெகதீப் தன்கர் ராஜினாமா செய்திருப்பது புரியாத புதிராக உள்ளது” என்று கூறியுள்ளார் ஜெய்ராம் ரமேஷ்.**

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க தீர்மான நோட்டீஸ் விவகாரத்தில் பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் நெருக்கடியால் ஜெகதீப் தன்கர் பதவி விலகினாரா? என்பதே எதிர்க்கட்சிகள் எழுப்பும் சந்தேகம் ஆகும்.

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் கட்டுக்கட்டாகப் பணம் கைப்பற்றப்பட்டது. இது உண்மை என்று உச்சநீதி மன்ற நீதிபதிகள் விசாரணையும் உறுதி செய்தது. எனவே, அவரை பதவி நீக்கம் செய்ய அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தி வருகிறார்கள். நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவியில் இருந்து நீக்க 208 எம்.பி.க்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நீதிபதி பதவியில் இருந்து ஒருவரை நீக்க வேண்டுமானால் 100 மக்களவை உறுப்பினர்களும், 50 மாநிலங்களவை உறுப்பினர்களும் அந்த நோட்டீஸில் கையெழுத்துப் போட்டிருக்க வேண்டும்.

145 மக்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் மக்களவை தலைவர் ஓம்பிர்லாவிடம் தரப்பட்டது. 63 மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் குடியரசுத் துணைத் தலைவரும் மாநிலங்களவை அவைத் தலைவருமான ஜெகதீப் தன்கரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்திட்ட தீர்மானத்தைப் பெற்றதாக தன்கர் ஒப்புக்கொண்டார், அவர்களின் கையொப்பங்களைச் சரிபார்ப்பதாகவும் கூறினார். டெல்லி நீதிபதியை நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த தீர்மானத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். விதிகளின்படி செல்வதைத் தவிர தன்கருக்கு வேறு வழிகள் இல்லை. ஆனால் இதனை பா.ஜ.க. தலைமை விரும்பவில்லை. இதுதான் தன்கர் பதவி விலகலுக்கு காரணமாக அமைந்து விட்டது.

**பா.ஜ.க.வின் பவர் பாலிடிக்ஸும் இதற்குப் பின்னணியாக உள்ளதாகச் சொல்லப்படுகிறது. 75 வயதை அடைந்தவர்கள் அரசியலில் இருந்தும் பதவியிலிருந்தும் ஓய்வு பெற வேண்டும் என ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் அண்மையில் பொதுவெளியில் பேசியிருந்தார். விரைவில் 75 வயதை நெருங்க உள்ள பிரதமர் மோடியை குறிப்பிட்டே மோகன் பகவத் பேசியதாக சர்ச்சை எழுந்தது. மோகன் பகவத்தின் பேச்சுக்கும், தற்போது ஜெகதீப் தன்கரின் பதவி விலகலுக்கும் தொடர்பு இருக்கிறது என்றும் டெல்லி தகவல்கள் சொல்கின்றன.**

ஜெகதீப் தன்கரின் பதவிக்காலம் 2027ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை இருந்தாலும், தற்போது அவருக்கு 74 வயதாகிறது. விரைவில் 75 வயதை எட்ட உள்ள பிரதமர் மோடிக்கு நெருக்கடி கொடுக்கவே, ஜெகதீப் தன்கரை ராஜினாமா செய்ய வைத்திருக்கிறது நாக்பூர் மேலிடம் என்றும் சொல்கிறார்கள்.

**எப்படிப் பார்த்தாலும் பா.ஜ.க. பூதம், ஜெகதீப் தன்கரை விழுங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். குடியரசுத் துணைத் தலைவரையே அவர்கள் எந்தளவுக்கு மதித்துள்ளார்கள் என்பதும், எந்த வகையில் நடத்துகிறார்கள் என்பதும் இதன் மூலமாகத் தெரிகிறது. இந்திய மக்களாட்சி நெறிமுறைகளை காலில் போட்டு மிதித்து நசுக்கும் காட்சியாகவே தன்கரை துரத்தியதைப் பார்க்க வேண்டும்.**




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் பெ. குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ. நரேஷ் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

## இராஜேந்திர சோழன் பிறந்த நாள் ! அரியலூர் மாவட்டம் –

# சோழகங்கம் ஏரியில் - ரூ.12 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகள்! ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் - சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 24-**

**மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அரியலூர் மாவட்டம் சோழகங்கம் ஏரியில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகள், ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் நடைபெறும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்தநாளான ஆடி திருவாதிரை விழாவினை 2021- ஆம் ஆண்டு முதல் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திர சோழனின் நினைவைப் போற்றும் வகையிலும், அந்தப் பேரரசனின் அழியாப் புகழினை உலகிற்குச் சொல்லும் வகையிலும், ஒரு புதிய அருங்காட்சியகம் 10 ஏக்கர் பரப்பளவில் 22.10 கோடி ரூபாய் செலவில் அமைத்திட தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான திட்டம் மற்றும் ஆரம்ப கட்டப்பணிகள் துவக்கப் பட்டுள்ளன.

மாமன்னன் இராஜேந்திர சோழன் கடாரம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளை வெற்றிகண்டு ஆயிரம் ஆண்டு நிறைவடைந்த நிகழ்வினை சிறப்பிக்கும் வகையில் இந்த வருடம் 23.07.2025 ஆடி திருவாதிரை விழாவினை முன்னிட்டு புதிய அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அரியலூர் மாவட்டம், பொன்னேரி எனப்படும் சோழகங்கம் ஏரி இராஜேந்திர சோழ மன்னரால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஏரியாகும். இராஜேந்திர சோழ மன்னர் ஆட்சிகாலத்தில் சோழகங்கம் என்றும் அழைக்கப்பட்டது.

கங்கை படையெடுப்பு வெற்றியின் நினைவாக கங்கைகொண்ட சோழபுரத்தில் தன் நாட்டு மக்களின் தேவைக்காக கங்கை நீரைக் கொண்டு சோழகங்கம் என்ற ஏரியை (பொன்னேரி) இராஜேந்திர சோழன் உருவாக்கினார் என்பது திருவாலங்காட்டு செப்பேடுகளின் வாயிலாக அறிகிறோம். மாமன்னன் இராஜேந்திர சோழன் உருவாக்கிய இந்த ஏரியில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளைத் தற்போது 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, 700 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியின் கரைகள் பலப்படுத்தப்படும். மேலும், 15 கிலோமீட்டர் நீளமுள்ள உபரிநீர் வழிக் கால்வாய்களை புனரமைத்தல், 4 வடிகால் பகுதிகளை தூர்வாருதல், 4 மதகுகளை புனரமைத்தல், 38 கிலோ மீட்டர் நீளமுள்ள வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம் பிச்சனூர், குருவாலப்பர் கோவில், இளையபெருமாள் நல்லூர், கங்கை கொண்ட சோழபுரம், உட்கோட்டை மற்றும் ஆயுதகளம் ஆகிய கிராமங்களில் 1374 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.

மேலும், சோழகங்கம் ஏரியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையின் மூலம் ரூபாய் 7.25 கோடி மதிப்பீட்டில் தகவல் தொடர்பு மையம், நடைபாதை சிறுவர் விளையாட்டு மையம், இருக்கையுடன் கூடிய பூங்கா, சுற்றுச் சுவர், வழிகாட்டிப் பலகை, கண்காணிப்பு கேமராக்கள், பாதுகாப்பு அறை, மின்வசதிகள், கழிப்பிட வசதி, பசுமைப் பரப்பை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## நெல்லை களக்காடு நகராட்சி, 7 பேரூராட்சிகளுக்கு

# ரூ.423.13 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் !

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆய்வு!

*நெல்லை, ஜுலை 24-*

*நெல்லை மாவட்டம் களக்காடு மற்றும் 7 பேரூராட்சிகளுக்கான ரூபாய் 423.13 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் பணிகள் குறித்து சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேரில் சென்று ஆய்வு செய்தார்.*

*இது தொடர்பான திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து நெல்லை மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி அலுவலகத்தில் (22.07.2025) அன்று ரூ.423.13 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளுக்கான தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகளின் ஆய்வு கூட்டம் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், முன்னிலையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் வள்ளியூர், திசையன்விளை, பணகுடி ஆகிய பேரூராட்சி தலைவர்கள்,வார்டு உறுப்பினர்கள்,குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

*நெல்லை மாவட்டத்திலுள்ள நான்குநேரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட களக்காடு நகராட்சி மற்றும் நான்குநேரி,ஏர்வாடி, மூலக்கரைப்பட்டி, திருக்குறுங்குடி, பேரூராட்சிகள் மற்றும் இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட,வடக்கு வள்ளியூர், திசையன்விளை, பணகுடி ஆகிய 7 பேரூராட்சிகளுக்கு ரூபாய். 423.13 கோடிக்கு தாமிரபரணி நதியை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.*

*எதிர்காலத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் என்பதை கருத்தில் கொண்டு இத்திட்டத்தில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டு மக்கள் தொகையானது அடிப்படை வருடம் 2037ல் 1,79,320, இடைக்கால வருடம் 2037ல் 2,10,090 மற்றும் உச்சகட்ட வருடம் 2052ல் 2,44,760 எனவும் கொள்ளப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தில் தாமிரபரணி நதியில்,சேரன்மகாதேவி அருகில் அமைக்கப்பட்டுள்ள 8.00 மி.மீ விட்டமுள்ள கிணற்றிலிருந்து நதி நீர் எடுக்கப்பட்டு அங்கிருந்து 9.06 கி.மீ தொலைவிலுள்ள கங்கனாங்குளம் அருகிலுள்ள,திருவிருந்தாள் புளி கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் 31.67 MLD சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு மின் மோட்டார்கள் மூலம் ஊந்தப்பட்டு, பின் நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளில் அமையவுள்ள தரைமட்ட குடிநீர் சேகரிப்பு தொட்டிகள் மூலம் சேமிக்கப்பட்டு, பின் நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளில் ஏற்கனவே அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகள் -38 எண்ணம் மற்றும் புதிய மேல்நிலைத் தொட்டிகள் -24 எண்ணம் வாயிலாக புதிதாக பதிக்கப்படவுள்ள பகிர்மான குழாய்கள் 521.68 கி.மீ மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது. இக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் 49417 வீடுகளுக்கு புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தில் தற்போது வரை 75 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, இத்திட்டமானது 11 / 2025 - யில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. குடிநீர் திட்ட பணிகளுக்கு வள்ளியூர் திசையன்விளை பணகுடி ஆகிய பேரூராட்சி தலைவர்கள்,வார்டு உறுப்பினர்கள், முழு ஒத்துழைப்புடன் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து குடிநீர் திட்டப்பணிகளை விரைவாக முடிக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.*

*நிகழ்வில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) வில்லியம் ஜேசுதாஸ், தலைமை பொறியாளர் கணேசன், நிர்வாகப் பொறியாளர் தயாளன் மோசஸ், உதவி நிர்வாகப் பொறியாளர் பாக்கியராஜ் , ஆசிக், திட்ட மேற்பார்வையாளர் விஜயகுமார், பேரூராட்சி தலைவர்கள் ராதாகிருஷ்ணன் (வள்ளியூர்) தனலெட்சுமி தமிழ்வாணன் (பணகுடி) துணைத் தலைவர்கள் கண்ணன் (வள்ளியூர்) புஷ்பராஜ் (பணக்குடி) மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாந்தி சுயம்பு உட்பட அரசு அலுவலர்கள், பேரூராட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.*



வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகர் பகுதியில் ரூ.1.42கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள முழு நேர கிளைநூலக கட்டிடத்தை நீர்வளம் – சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், காந்திநகர் பகுதி செயலாளர் என்.பரமசிவம், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி கூட்டுறவு சங்க நகரமைப்பு தலைவர் தேவசுந்தரம், செயலாளர் மனோகரன், 14 வதுவட்ட செயலாளர் கெஜா, ஜெ.சி.பி.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.